**செய்தி வெளியீடு எண்:122** **நாள்: 01.03.2017**

**செய்தி வெளியீடு**

**மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான மாநில அளவிலான குத்துச்சண்டை விளையாட்டு போட்டிகள் - 2016 – 2017**

2016 – 2017ம் ஆண்டிற்கான மாநில அளவிலான மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான குத்துச்சண்டை விளையாட்டு போட்டிகள் ஆண். பெண் இருபாலருக்கும் 01.03.2017 முதல் 04.03.2017 வரை நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் கீழ்க்கண்ட விபரப்படி நடைபெறவுள்ளது.

| | | |
|---|---|---|
| **Boxing** | **Men Category** | **Up to 49 Kg., 49-51., 52-56 Kg., 56-60 Kg., 60-64 Kg., 64-69 Kg., 69-75 Kg., 75-81 Kg., 81-91 Kg., and +91 Kg.** |
| | **Women Category** | **Upto 48 Kg., 48-51., 51-54 Kg., 54-57 Kg., 57-60 Kg., 60-64 Kg., 64-69 Kg., 69-75 Kg., 75-81 Kg., and +81 Kg.,** |

இப்போட்டியில் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்ற மாவட்ட அளவிலான குத்துச்சண்டை விளையாட்டு போட்டியில் முதல் இடத்தை பிடித்த சுமார் 650 வீரர், வீராங்கனைகள் பங்கு கொண்டுள்ளனர். இப்போட்டியில் கலந்து கொண்டு முதல் மூன்று இடங்களை பெறும் குத்துச்சண்டை வீரர், வீராங்கனைகளுக்கு முதல் பரிசாக தலா

ரூ. 1,00,000-ம், இரண்டாம் பரிசாக தலா ரூ. 75,000-ம், மூன்றாம் பரிசாக இருவருக்கு தலா ரூ.50,000-ம் பரிசு தொகையாக மொத்தம் ரூ. 55,00,000- (ரூபாய் அம்பத்தைந்து லட்சம் மட்டும்) தமிழக அரசால் வழங்கப்படவுள்ளது

இந்நிகழ்ச்சி இன்று 01.03.2017 பிற்பகல் 3.00 மணியளவில் ஜவகர்லால் நேரு உள்விளையாட்டரங்க வளாகத்தில் மாண்புமிகு பள்ளிக்கல்வி இளைஞர்நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் தலைமை உறையாற்றி குத்துச் சண்டை போட்டியை துவக்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சிக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அரசு முதன்மை செயலர் முனைவர் ராஜேந்திரகுமார். இ.ஆ.ப. அவர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய முதன்மை செயலர் / உறுப்பினர் செயலர் திரு. அசோக் டோங்ரே, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இதனையடுத்து குத்துச்சண்டை போட்டிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**